சுருக்கம்

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – இராமநாதபுரம் மாவட்ட வருவாய் அலகு – திருமதி. செ.காவேரி, தா/பெ. காலஞ்சென்ற திருமதி. திருச்செல்வி– கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளராகப் பணிநியமனம் வழங்கப்பட்டது – பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை,**
**பணிகள் அலகு, பணி–9(2) பிரிவு**

அரசாணை (3டி) எண்.155

நாள் 01.09.2023.
சோபகிருது வருடம், ஆவணி–15,
திருவள்ளுவர் ஆண்டு 2054.

படிக்கப்பட்டது:

1. அரசாணை (3டி) எண். 55, வருவாய்த் துறை, நாள் 31.03.2017.
2. அரசாணை (நிலை) எண். 18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.
3. கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரின் கடித எண்.ஆ.கு.4/44046/ 2019, நாள் 08.01.2021.

******

**ஆணை:–**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், இராமநாதபுரம் மாவட்ட வருவாய் அலகில், இளநிலை உதவியாளராகப் பணியாற்றி பணியிடையே 28.05.1996 அன்று காலஞ்சென்ற திருமதி திருச்செல்வி என்பவரின் மகள் செல்வி செ.காவேரி என்பவர் கருணை அடிப்படையில் பணி வழங்கக் கோரி மூன்றாண்டு கடந்து விண்ணப்பம் அளித்துள்ளதால், தனியர் கருணை அடிப்படையில் பணிநியமனத்திற்கான இதர தகுதிகளை நிறைவு செய்யும்பட்சத்தில் நீதிமன்ற உத்தரவின்படி கருணை அடிப்படையில் பணிவழங்க ஏதுவாக, தனியர் பொருட்டு அரசாணை (நிலை) எண். 120, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, நாள் 26.06.1995 மற்றும் அரசு கடித (நிலை) எண். 202, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, நாள் 08.10.2007 ஆகியவற்றிற்கு விலக்களித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர், இராமநாதபுரம் மாவட்ட வருவாய்

//த.பி.பா//

Scanned with ACE Scanner

அலகில், இராமேஸ்வரம் வட்டாட்சியர் அலுவலகத்தில், பதிவுரு எழுத்தராகப் பணியாற்றிய திரு.செல்லமணி என்பவர் 14.11.1993 அன்று பணியிடையில் இறந்து விட்டதால் அவரது மனைவி திருமதி.திருச்செல்வி என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் வழங்கப்பட்டு, அவரும் இளநிலை உதவியாளர் நிலையில், பணியிடையே 28.05.1996 அன்று காலமானதாகவும், காலஞ்சென்ற திருமதி.திருச்செல்வி என்பவரின் மகள் திருமதி.செ.காவேரி என்பவர் தனக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் கோரி பள்ளி இறுதி வகுப்பு முடித்து 18 வயது ஆனவுடன் 02.09.2010 அன்று விண்ணப்பம் அளித்துள்ளார் என்றும், இதனைத் தொடர்ந்து, இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியரால் பணிநியமனம் வழங்க தெளிவுரை கோரப்பட்டதில், அரசால் தனியருக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்க இயலாது என தெரிவிக்கப்பட்டது என்றும், இதனை எதிர்த்து தனியர் தனக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் கோரி சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் தொடர்ந்த வழக்கு W.P.(MD) No. 11660/2015-இல் 28.09.2016 அன்று வழங்கப்பட்ட தீர்ப்புரையில் உத்தரவு பெறப்பட்ட எட்டு வார காலத்திற்குள் மனுதாரரின் தகுதிகளைப் பார்த்து பணிநியமனம் வழங்குமாறு உத்தரவிடப்பட்டது என்றும், இதனைத் தொடர்ந்து மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், நீதிமன்ற உத்தரவுப்படி, பிற தகுதிகளை நிறைவு செய்யும் பட்சத்தில் தனியருக்கு பணிநியமனம் வழங்குமாறு ஆணை வெளியிடப்பட்டது என்றும், இதனைத் தொடர்ந்து தனியர் திருமதி.செ.காவேரி என்பவருக்கு இளநிலை வருவாய் ஆய்வாளராகப் பணிநியமனம் வழங்கப்பட்டு தனியர் 12.05.2017 முற்பகல் முதல் இளநிலை வருவாய் ஆய்வாளராகப் பணிபுரிந்து வருகிறார் என்றும், தனியரின் பணிநியமனத்தை தனியர் பணியேற்ற நாளான 12.05.2017 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து அரசாணையினை பெற்றுத் தருமாறு இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் கோரியுள்ளார் என்றும், இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியரின் அறிக்கையினை ஏற்று, தனியரின் பணியினை இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் தனியர் பணியில் சேர்ந்த நாளான 12.05.2017 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து அரசாணையினைப் பெற்று தருமாறு அரசிற்கு பரிந்துரை செய்துள்ளார்.

3. கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரின் பரிந்துரை அரசளவில் நன்கு ஆய்வு செய்யப்பட்டது. அதனடிப்படையில், இராமநாதபுரம் மாவட்ட வருவாய் அலகில், இளநிலை உதவியாளராகப் பணியாற்றி பணியிடையே காலஞ்சென்ற திருமதி.திருச்செல்வி என்பவரின் மகள் திருமதி.செ.காவேரி, என்பவர் மூன்றாண்டுகள் காலங்கடந்து விண்ணப்பம் அளித்துள்ளதாலும், தனியர் திருமணமான பெண் வாரிசுதாரர் என்பதாலும், தனியர் பொருட்டு, தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவு 58-ன்கீழ் ஆளுநர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016-இன் பிரிவு 20(6)(b), பிரிவு 15 மற்றும் பணியேற்ற நாள் முதல் பணப்பலன்கள் பெற பிரிவு 28(2) ஆகியவற்றை தளர்வு செய்து, தனியர் திருமதி.செ.காவேரி

Scanned with ACE Scanner

என்பவரின் பணியினை அவர் பணியேற்ற நாளான 12.05.2017 முற்பகல் முதல் இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது.

4. இவ்வாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் அ.சா.எண். 4025/க்யூ-2/2023-1, நாள் 06.06.2023 மற்றும் மனித வள மேலாண்மைத் துறையின் அ.சா.எண். 5109889/ஜி-2/2023, நாள் 04.08.2023-இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**வே.ராஜாராமன்,**
**அரசு செயலாளர்.**

பெறுநர்
கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர்,
சேப்பாக்கம், சென்னை – 5.
மாவட்ட ஆட்சியர், இராமநாதபுரம்.
திருமதி செ.காவேரி, இளநிலை வருவாய் ஆய்வாளர்.
(மாவட்ட ஆட்சியர், இராமநாதபுரம் மூலமாக)

**நகல்**
மனித வள மேலாண்மைத் துறை, சென்னை-9.
இருப்பிட தணிக்கை அலுவலர், சென்னை-9.
இருப்புக்கோப்பு/உதிரி.

**// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //**

**பிரிவு அலுவலர்.**

Scanned with ACE Scanner